அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு !

மணப்பாறையில் கபடி ஸ்டேடியம் அமைக்கப்படும்!

ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி. தகவல்

மணப்பாறை, செப்.7-

மணப்பாறையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மணப்பாறை ஒன்றிய தி.மு.க. சார்பில் அகில இந்திய அளவிலான கபடி போட்டி கோவில் பட்டி சாலையில் உள்ள தீ ஆலை வீரப்பன் நினைவு இடத்தில் கடந்த 31ஆம் தேதி துவங்கி நான்கு நாட்கள் நடைபெற்றது. ஒன்றிய தி.மு.க.செயலாளர் ராமசாமி தலைமை வகித்தார். போட்டியில் தேசிய அளவில் 15க்கும் மேற்பட்ட மாநிலத்தில் இருந்து ஆண்கள் பெண்கள் என தனித்தனியாக பிரிவுகளில் 60 அணிகள் பங்கேற்றனர். முதல் நாள் ஆட்டத்தை மாநகர செயலாளர் மதிவாணன் துவக்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று மாலை கால் இறுதி போட்டி தி.மு.க. பிரிவில் சாய் சோனி பட் அரியானா அணி குருக்கள் அரியானா அணிகளுக்கான போட்டியை தி.மு.க.வின் விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் தயாநிதிமாறன் எம்பி பாராளுமன்ற மக்கள் பிரச்சினை குறித்து மணிப்பூர் கலவரம் பற்றி பேசிய கர்ஜனை பேச்சு குறித்த ஆடியோ திரையிடப்பட்டது. அப்போது அவரை பேச்சைக் கேட்டு பொதுமக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

பின்னர் தயாநிதி மாறன் எம்.பி. பேசியதாவது : நான் பல்வேறு இடங்களுக்கு சென்று கபடி போட்டியை பார்க்கிறேன் ஆனால் இங்குள்ள ஆர்வத்தை பார்க்கும் போது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது, மணப் பாறை முறுக்கு மட்டும் பேர் போனது ஊர் என்று நினைத்தேன். ஆனால் ஆக்கி கபடி உள்ளிட்ட விளையாட்டிற்கு பேர் போன ஊராக உள்ளது. இங்கு ஸ்டேடியம் அமைக்க வேண்டும் என்று கடந்த முறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்துள்ளதாக சொன்னார்கள். இந்த முறை நானும் அமைச்சர் உடன் சேர்ந்து சொல்கின்றேன் மணப்பாறையில் ஸ்டேடியம் அமைக்க நானும் முயற்சி எடுப்பேன். தாத்தா செய்தது போல தந்தை செய்தது போல உதயநிதியும் சிறப்பாக செயல்பட்டு தமிழக பாசிச பாஜக அரசு உள்ளே வராமல் தடுக்கின்ற அளவிற்கு செயல்பட்டு வருகின்றார் என்றார். அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சட்டமன்றத்தில் பள்ளிக்கல்விதுறை மானிய கோரிக்கைகளின் போது சுமார் ஒரு மணி நேரம் எவ்வித துண்டு சீட்டு இல்லாமல் பேசும் அளவிற்கு திறன் வாய்ந்த அமைச்சராக உள்ளார். விளையாட்டு மேம்பாட்டு அணி என்பது புதிதாக உருவாக்கப்பட்ட தாகும் திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதே தலைவர் ஸ்டாலின் அவர்களின் குறிக்கோள்.

இரண்டு ராக்கெட் அனுப்பப்பட்டது அதற்கான தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் அரசு பள்ளியில் படித்த தமிழர்கள் அதற்கான திராவிட மாடல் ஆட்சி தான் என்றும் தயாநிதிமாறன் எம்பி பேசினார்.

தொடர்ந்து கபடி வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு கை கொடுத்து வாழ்த்தி உற்சாகப்படுத்தினார். நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த கபடி போட்டியில் தமிழ்நாடு, டெல்லி, மும்பை, ஹரியானா, உத்தரப் பிரதேசம், லக்னோ, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி, ஆந்திர பிரதேசம், நாக்பூர் உட்பட 15 இருக்கும் மேற்பட்ட மாநிலத்தில் இருந்து போலீஸ், ஏர் இந்தியா, இந்தியன் நேவி, ரெட்ட ஆர்மி, கிரீன் ஆர்மி, ஓ.என்.சி.சி, மகேந்திரா மகேந்திரா மும்பை மற்றும் போலீஸ் அணியினர் உள்ளிட்ட பல அணிகள் கலந்து கொண்டனர் .

மணப்பாறை சட்ட மன்ற உறுப்பினர் அப்துல் சமது, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி, மாவட்ட நிர்வாகிகள் கோவிந்தராஜன், செங்குட்டுவன், லீலாவேலு , மூக்கன், குணசேகரன், ஒன்றிய குழு தலைவர்கள் அமிர்தவள்ளி ராமசாமி, பழனியாண்டி, குணசீலன், மணப்பாறை நகர செயலாளர் செல்வம், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கிருஷ்ணகோபால், மற்றும் திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் விளையாட்டு வீரர்கள் என பலரும் கபடி போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இறுதி போட்டியில் வெற்றி பெற்ற ஆண்கள் அணிக்கு முதல் பரிசாக ரூபாய் 1.50 லட்சம், இரண்டாம் பரிசாக 1 லட்சமும், மூன்றாம் பரிசாக 50001, நான்காம் பரிசாக 50,000, அதே போல் பெண்கள் அணிக்கு முதல் பரிசாக 1.25 லட்சமும், இரண்டாம் பரிசாக 75,000 மூன்றாம் பரிசாக 50,001/ நான்காம் பரிசாக 50,000 வழங்கப் பட்டது.

‘சங்கூத நேரம் பார்!’ விரைவில் உன்றன் சடலத்தைப் போர்க்களத்தில் கழுகு மேயும்!

யாரைடா தலைகொய்வாய்? அறுப்பாய் நாக்கை?
ஆரியத்துப் பிண்டங்காள்! மிலேச்ச நாயே!
போரையன்றோ தொடுக்கின்றாய்! பிழைக்க வந்த
பேடியனே! மதவெறிகாள்! அமைதி வீழ்த்தி,
ஊரையெலாம் ஒற்றுமையைச் சீர்கு லைக்க
ஒருவன்பின் ஒருவனாகப் புறப்பட் டானா?
தேரிழுக்க மக்களெல்லாந் திரண்டாற் போலத்
தெருவெங்கும் தமிழினத்தார் ஸ்டாலின் பின்னே!
யாருக்கு அறைகூவல் விடுத்தாய்? மூடா!
அருந்தமிழன் தலைகேட்டா? போடா! முட்டாள்!
போருக்குப் புறப்பட்டால் கத்தி, ஈட்டி
புகழ்படைக்கும் கேடயத்தால் வெற்றி ஈட்டும்
நேருக்கு நேர்நின்று மோது கின்ற
நெறியினத்தில் உதித்தமகன் உதயா அன்றோ!
பேருக்கு வீண்பேச்சால் வாயால் கெட்டாய்!
பெட்டைபோல ஒளிந்திருந்து பிதற்றி னாயே!

காற்றுதனை எவன்தடுக்க வேலி யிட்டான்?
கடலுக்கும் எவன்தான்டா மூடி செய்தான்?
ஏற்றமிகு வானத்தைத் தொடுவ தற்கே
எவன்நின்று ஏணியினில் சாதித் திட்டான்?
நாற்றமுறு மலர்க்கூட்ட நலந்த டுக்க
நடவடிக்கை எடுத்தவன்தான் பாரி லுண்டா?
போற்றுதற்கு ரியமகனார் கழகந் தம்மின்
பயணத்தைத் தடுப்பதற்கு வலிமை உண்டா?
கலைஞர்தம் பேரனடா! போடா பேடி!
கருஞ்சிவப்பு இருவண்ணக் கொடியைத் தூக்கி
நிலைமாற்ற ஊரெங்கும் உலாநேர் வந்த
நெடுஞ்செழியப் பாண்டியனின் பரம்ப ரைதான்!
வலைவீழ்ந்த மாந்தர்கள் மீட்டு வென்று
வரலாறு படைக்கின்ற வீரன் தான்டா !
தலையெழுத்து மாற்றிட்ட கலைஞர் பேரன்!
தமிழினத்தில் தோன்றிட்டான்! படைத்தான் வெற்றி|

தீரரடா எம்தம்பி! தீண்டி னாலோ
சீறுசிங்க முறக்கவிட் டெழுதல் போலப்
பேரறிஞர் கூட்டமடா: எதற்கும் அஞ்சாப்
பெரியாரின் சீடரன்றோ நினைவில் கொள்வாய்!
சூரியனுக் கேநெருப்பு வைக்க எண்ணும்
சூழ்ச்சிகள்தாம் வெல்லுமோடா? காவிக் கூட்ட
ஆரியத்தின் ஆணவமா? கணவாய் தாண்டி,
ஆடுமாடு மேய்க்கவந்த கூட்டத் தோனே!

தலைதம்பி உயிர்பறிக்க எண்ணும் தீயோய்!
திராவிடத்தார் கைகளென்ன ஊன மோடா?
விலைமாதர் பெற்றெடுத்த பிள்ளை கூட
விரும்பாத வார்த்தைகளைப் பேச மாட்டான்!
கொலைவெறியால் கொக்கரிக்கும் மதம்பி டித்தோன்
தலைமகற்கா குறிவைத்தான்? இல்லை! இல்லை!
மலைநிகர்த்த திராவிடத்தா ரினத்தை அன்றோ,
மதிஇழந்து வம்புக்கே இழுத்திட் டானே!

சிங்கத்தைச் சீண்டுகின்ற மதக்கூட் டத்தார்
சிறுநரியின் தீயெண்ணம் பலிக்கா திங்கே!
தங்கத்தின் தரங்குறைக்க வெற்று வேட்டுத்
தகரங்கள் சலசலப்பா மதிப்பால் வெல்லும்!
பொங்கிவரும் காட்டாற் றைத்தடுப் பதற்குப்
பொத்திவைத்த மணல்மேடா அணையாய் நிற்கும்?
சங்கூத நேரம்பார்! விரைவில் உன்றன்
சடலத்தைப் போர்க்காட்டில் கழுகு மேயும்!
மோதிப்பார்! பகுத்தறிவு மலையை! உன்னால்
முடிந்தவரை முட்டிப்பார்! மின்சா ரத்தைக்
கோதிப்பார்! ‘உயிரிருந்தால்! மதத்தின் பேரால்
குற்றேவல் புரிகின்ற தண்டச் சோறே!
வாதிடவா அறிவிருந்தால்! பெரியார் கொள்கை
வெடிமருந்துக் கிடங்கென்றே உணர்ந்து கொள்வாய்!
போதிமர முனிவருக்கே புத்தி சொன்ன
பழம்பெரும் கூட்டமடா கலைஞர் கூட்டம்!

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் முடிந்த பிறகு

“தமிழ்நாட்டிற்கு வருகிற சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிக்கும்!”

அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, செப். 7 -

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (05.09.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் மையமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். சுற்றுலா பயணிகள் மற்றும் இளைஞர்களுக்கு சாகச அனுபவங்களை தரும் வகையில் ஊட்டி, தருமபுரி மாவட்டம் வத்தல் மலை, ஏலகிரி மலை உள்ளிட்ட பகுதிகளில் இளைய தலைமுறையினரை உற்சாகப்படுத்தும் வகையில் சாகச சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பழம்பெருமை வாய்ந்த துறைமுக நகரான பூம்புகார் (காவிரிபூம்பட்டினம் பழைய பெயர்) நகரத்தில் பூம்புகார் கலைக்கூடத்தில் புனரமைப்பு பணிகள் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

சுற்றுலாத் தலங்களில் வளர்ச்சித்திட்டப்பணிகளை மேற்கொள்ளும் போது வாகன நிறுத்தும் இடம், சுகாதார வளாகம் அமைத்தல் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள் அனைத்தும் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும்போது, தமிழ்நாட்டிற்கு வருகின்ற சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்து, உள்ளூர் மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடையும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

மக்களைக் காப்பாற்ற - மாற்று அரசியலான திராவிட அரசியலை இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டனர்!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே ! பாராண்ட தமிழனுக்கு பாரதத்தை ஆளத் தகுதி இல்லை என்று சொல்வதே சனாதன தர்மம்! முன்பொரு நாளில் அப்படி இகழ்ந்தவரை போரிலே வென்று இமயத்தில் புலிக்கொடியை நாட்டி பழித்தவர்கள் தலையிலேயே கல் சுமந்து வரவைத்து கண்ணகிக்கு கோட்டம் அமைத்த தமிழ் மன்னனின் வழி வந்த தம்பி உதயநிதி ஸ்டாலின்... நாளை நடக்கப் போவதை இன்று பேசியதில் தவறென்ன இருக்கிறது?

வீரம் எங்களுக்கு விளையாட்டு, விவேகம் எங்கள் அரிச்சுவடி, தமிழ் எங்கள் தாய்மொழி. திராவிடம் எங்கள் நிலப்பரப்பு. யாதும் ஊரே யாவரும் கேளிர். இதுதான் எமது பண்பாடு. வந்தாரை வாழ வைப்பதே . எங்கள் கலாச்சாரம். ஒன்றே குலம் ஒருவனே தேவன். இதுவே எங்கள் மதம். சனாதன அரசியலுக்கு மாற்றாக நாம் நடத்துகின்ற திராவிட அரசியலே நமது அரசியல்! சனாதன ஒழிப்பே நாம் சொல்லும் சமநீதி.. சமதர்மம் மலர்வதற்கான வழி. மூன்று சதவீதத்தினருக்கு ஒன்றிய அரசு மூன்று முக்கிய அமைச்சர் பதவிகளை வழங்கி இருப்பது தான் சனாதன அரசியல் தர்மமா? கேட்பது நானல்ல மக்கள்! அத்தகைய சனாதன தர்மம் ஒழிக்கப்பட வேண்டுமா வேண்டாமா? இதை இந்தியாவிலுள்ள 97 சதவீதத்தினரும் எதிர்க்க வேண்டுமா வேண்டாமா?

அந்த நியாயமான தர்மமான ஜனநாயக ரீதியான குரலை இந்தியா முழுவதும் ஒலிக்க வைத்து... சனாதன தர்மத்தை ஒழித்து, இந்தியாவில் சோசலிசத்தை மலர வைப்பதே திராவிட அரசியலின் நோக்கமாகும்! அதற்கான குரல் ஒட்டுமொத்தமாக ஒலிக்கத் தொடங்கி ஆண்டுகள் பல ஆகிவிட்டன. அந்தக் குரல் இன்று தான் அமைச்சர் அமித்ஷா அவர்களின் காதல் விழுந்திருக்கிறது என்று சொன்னால் யார் அதை நம்புவார்கள்! நம்ப முடியாது என்று எல்லோருக்குமே தெரியும்!

அப்படியானால் இப்போது மட்டும் அமித்ஷா கொந்தளிப்பதற்கும். இந்துக்களை தூண்டிவிடும் வகையில் பேசுவதற்கும் என்ன காரணம்? பயம்.... பயம் மட்டுமே காரணம்!

தமிழ்நாடு முதல்வர் தன் கொள்கை முழக்கமான திராவிட அரசியலை பேசி வருவது அவரையும் அவரது சனாதன தர்ம அரசியலையும் ஆட்டத் தொடங்கி விட்டது என்பது தானே பொருள்! அரசியல் வேறு; மதம் வேறு என்பதை இந்தியர்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டனர் என்பது தானே பொருள்? ஆரியக் கூட்டத்திடமும், சனாதன சன்மார்க்க அரசியலுக்குள்ளும் அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய மக்களைக் காப்பாற்ற ‘திராவிட அரசியல்’ என்ற மாற்று அரசியலை இந்திய மக்கள் ஏற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டனர் என்பது இப்போதாவது புரிகிறதா?

தேசப் பிதாவின் சீரிய சிந்தனைகள் இனி மலரட்டும். காவிகள் அலறட்டும். ஏழையின் சிரிப்பிலே இறைவனை காண்போம். சாதி, மதம் அற்ற சமநீதி, சமதர்மம் கொண்ட ஆட்சியாளரை ஒன்றிய அரசின் பதவியில் அமர வைப்போம். கலகம் செய்வதற்கென்று ஒரு கடவுள். அவர் பெயர் நாரதராம். அந்த நாரதரின் கலகங்கள் நன்மையில் தான் முடியுமாம். அவரைத் தொழுகின்ற பக்த சிகாமணிகள் தான் இந்த ஆரியர்கள்.

இந்து என்றால். சனாதன தர்மா என சாரி... என்று நான் சொல்லவில்லை. டி.ஏ.சாமிநாத ஐயர் வெளியிட்ட ஜெம் அகராதியில் 467 ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது'! பியர்ஸ் என் சைக்ளோபீடியா.... இந்துஸ்தானம் என்பது இமயத்துக்கும் விந்திய மலைக்கும் இடையே உள்ள ஒரு பகுதி என்று கூறுகிறது. இதை மறுப்பாரா அமைச்சர் அமித்ஷா? இதையெல்லாம் ஆராய்ந்து அறிந்து பேசுவதனால் தான் நமது முதல்வரைப் பார்த்து வடநாட்டு சனாதன தர்மம் அஞ்சுகிறது! அதனால்தான் ஸ்டாலின் இஸ் மோர் டேஞ்சரஸ் தென் கருணாநிதி. என்று சொன்னார்கள். தற்போது உதயநிதி அவர்களை பார்த்து என்ன சொல்லப் போகிறார்கள்?

வி.செ. குகநாதன்
திரைப்பட இயக்குநர்

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

மயிலாடுதுறை மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

நாகை, செப்.7-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் இன்று (07.09.2023 - வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை மகாதான தெருவில் உள்ள அபிராமி திருமண மண்டபத்தில் என் தலைமையில் நடைபெறுகிறது. கலந்துரையாடல் கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சரான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1.முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சார்பு அணிகளின் சார்பில் கொண்டாடுவது.

2.கழகத்திற்கு புதிய உறுப்பினர் சேர்த்தல்.

3.கழக ஆக்கப்பணிகள்.

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.,
செயலாளர்,
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி

அமெரிக்கா - பிராங்கிளின் நகரியத்தின் வாழ்த்துப் பிரகடனம்!

முதல்வரிடம் எழுத்தாளர் இமயம் - பாண்டிமதி துரைராஜ் வழங்கினர்!

சென்னை, செப்.7-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.9.2023) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம், ஏ.ஜி.பாலமுருகன், பாண்டிமதி துரைராஜ் ஆகியோர் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி அமெரிக்க நாட்டின் நியூஜெர்ஸி மாநிலத்தில் உள்ள ஃபிராங்கிளின் நகரியத்தின் வாழ்த்துப் பிரகடனத்தை (New Jersey, Franklin Township – Proclamation) அளித்தார்கள்.

வாழ்த்துப் பிரகடனத்தின் தமிழாக்கம் ஃபிராங்கிளின் நகரியம் சோமர்செட் மாவட்டம், நியூஜெர்சி, அமெரிக்கா.

இந்தியாவில், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரான கலைஞர் அவர்கள், 1924-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி பிறந்தவர்.

அரசியல், தமிழ் மொழி, இலக்கியம், சினிமா ஆகிய துறைகளில் கலைஞர் அவர்கள் ஆற்றிய அளப்பரிய பணிகளுக்காக கௌரவிக்கப்படுகிறார்.

இந்தியாவில், தமிழ்நாட்டில் தனது சமூகநீதிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த முறையில் நிருவாகம் செய்து, ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு அயராது உழைத்தவர் அவர்.

டாக்டர் கலைஞர் அவர்கள், தனது நீண்ட மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்நாளில், அறிவு, அனுபவம், ஞானம் மற்றும் சமூகத்தின் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாக, அனைத்துத் தரப்பு மக்களின், அனைத்து வயதினரின் மரியாதையையும், அன்பையும் பெற்றிருந்தார்.

எனவே, அமெரிக்காவின் நியூஜெர்சி மாநிலத்தின் சோமர்செட் மாவட்டத்தில் உள்ள பிராங்க்ளின் நகரியத்தின் துணை மேயராக உள்ள ராம் அன்பரசன் என்கிற நான், டவுன்ஷிப் கவுன்சில் மற்றும் அங்கு வசிக்கும் மக்களின் சார்பாக, டாக்டர் கலைஞர் அவர்களின் 100-வது பிறந்தநாளை முன்னிட்டு, இந்த வாழ்த்துப் பிரகடனத்தை வழங்குவதை பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் கருதுகிறேன்.

இவ்வாறு ராம் அன்பரசன், துணை மேயர் தெரிவித்துள்ளார்.